# சென்னை - திருவள்ளூர் - செங்கல்பட்டு - காஞ்சிபுரம் மாவட்டங்களில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு - நிவாரணப் பொருட்கள் வழங்கினார்!



வடகிழக்கு பருவமழை நேரத்தில் தொற்றுநோய் பரவாமல் தடுக்கும் வகையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின் பேரில், பல்வேறு இடங்களில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. அந்த வகையில், சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி தொகுதி, வி.ஆர்.தெரு பகுதியில் உள்ள சமுதாய நலக்கூடத்தில் நடைபெற்று வரும் மருத்துவ முகாமினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆய்வு செய்தார். மேலும், பொதுமக்களுக்காக உணவு தயார் செய்யப்படும் இடத்துக்குச் சென்று அங்கு உணவு தயாராகின்ற விதம் குறித்து கேட்டறிந்தார். மருத்துவ முகாமிற்கு வருகை தந்திருந்த மக்களுடன் கலந்துரையாடி அவர்களுடைய கோரிக்கைகளையும் பெற்றார். மழை நேரத்தில் கவனமுடனும் – பொறுப்புடனும் செயல்படுமாறு கேட்டுக் கொண்டார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் பலர் உள்ளனர்.



கனமழையின் தாக்கம் மக்களை நெருங்காமல் இருக்க இரவு – பகல் பாராமல் தூய்மைப்பணியாளர்கள் உள்ளிட்ட முன்களவீரர்கள் அயராது உழைத்து வருகின்றனர். சேப்பாக்கம் – திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பணியாற்றி வருகிற சென்னை மாநகராட்சி தூய்மைப்பணியாளர்கள் – சென்னைப் பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் பணியாளர்கள் உட்பட சுமார் 600 முன்களப்பணியாளர்களுக்கு பிரெட், சிற்றுண்டி, போர்வை உள்ளிட்ட நிவாரண உதவிகளைச் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார். அவர்களின் இடைவிடாதப்பணியை பாராட்டி வாழ்த்தினார். உடன் தயாநிதி மாறன் எம்.பி., மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு மற்றும் பலர் உள்ளனர்.





தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், இராமதாசுபுரம் ஈஷா ஏரியை பார்வையிட்டு, தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுரைகள் வழங்கினார். இந்த ஆய்வின்போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ்,மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபுசங்கர், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) காஞ்சிபுரம் மாவட்டம், குன்றத்தூர் ஒன்றியம், செம்பரம்பாக்கம் ஏரியினை பார்வையிட்டு, நீர்வரத்து மற்றும் நீர்வெளியேற்றம் குறித்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், திருப்பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் கு.செல்வப்பெருந்தகை, மாவட்ட கண்காணிப்பு அலுவலர் க.சு.கந்தசாமி, மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கலைச்செல்வி மோகன் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் திருவள்ளூர் மாவட்டம், திருநின்றவூர், ஏஞ்சல் பள்ளி வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள முகாமில் பொதுமக்களுக்கு சிற்றுண்டி, பிரெட் மற்றும் போர்வைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், பூவிருந்தவல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் த.பிரபு சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) சென்னை, கோவிலம்பாக்கம் சுண்ணாம்பு கால்வாயில் ஆகாய தாமரைகள் அகற்றப்பட்டு, தண்ணீர் சீராக செல்வதை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.10.2024) செங்கல்பட்டு மாவட்டம், தாம்பரம், அகரம் தென். கிருஷ்ணாநகர் பகுதியில், மழைநீர் வடிகால் தூர்வாரப்பட்டு வரும் பணியினை பார்வையிட்டார். இந்த ஆய்வின்போது குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா, துணை முதலமைச்சரின் கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், மாவட்ட ஆட்சித் தலைவர் ச. அருண் ராஜ், கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி செல்வி அனாமிகா ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.